# CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES

## நடப்பு நிகழ்வுகள்

## 01 மார்ச் 2025






**Contact : 93634 65657/93636 01008**
**Telegram Link https://t.me/ChinmayaTnpsc**

# தமிழ்நாடு


## விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை வாகனத் திட்டம்

- தமிழக அரசு, மக்களின் வீடுகளுக்கே சென்று அரசு சேவைகளை கொண்டு செல்லும் நோக்கத்துடன் "விழுதுகள்" ஒருங்கிணைந்த சேவை வாகனத் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ், கதிராலூர், தர்மபுரி, தென்காசி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் நான்கு புதிய சேவை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.




**திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்**

- அரசு சேவைகளை மக்களின் வீடுகளுக்கே கொண்டு செல்வது.
- புறநகர் மற்றும் தொலைதூர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அரசு சேவைகள் எளிதாக கிடைப்பதை உறுதி செய்வது.
- பல்வேறு அரசு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதை ஊக்குவிப்பது.




**வழங்கப்படும் சேவைகள்**

- ஆதார் பதிவு மற்றும் திருத்தங்கள்
- வருவாய் துறை சேவைகள் (சான்றிதழ்கள் வழங்குதல்)
- சுகாதார சேவைகள் (மருத்துவ பரிசோதனைகள், தடுப்பூசிகள்)
- சமூக நல துறை சேவைகள்
- இந்தத் திட்டம், மக்களுக்குத் தேவையான அடிப்படை அரசு சேவைகளை அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கொண்டு வருவதன் மூலம், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES (Coaching for Civil Services - IAS, IPS, IFS, IRS etc.)

# தேசிய நிகழ்வுகள்

## மின்சாரம் 2025 அறிக்கை - சர்வதேச எரிசக்தி முகமை (International Energy Agency IEA )

**உலகளாவிய மின்சார வளர்ச்சி**

- உலகம் முழுவதும் மின்சார நுகர்வு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும் 4.3% உயர்வு காணப்படுகிறது.
- 2027 ஆம் ஆண்டுக்குள் ஆண்டுக்கு 4% வரை மின்சார பயன்பாடு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சீனாவின் மின்சார நுகர்வு**

- சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை விட அதிகமான மின்சாரத்தை நுகரும் மிகப்பெரிய நாடாக உள்ளது.

**கார்பன் உமிழ்வு**

- 2024 ஆம் ஆண்டில் மின்சார உற்பத்தியில் கார்பன் உமிழ்வு 1% அதிகரித்தாலும், 2025 முதல் 2027 வரை அது நிலையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புதுப்பிக்கத்தக்க எரிசக்தி**

- 2025 முதல் 2027 வரை உலகளாவிய மின்சாரத் தேவையில் 95% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பூர்த்தி செய்யப்படும்.

**இந்தியாவின் மின்சார தேவை**

- இந்தியாவின் மின்சார தேவை 2024 ஆம் ஆண்டில் 5.8% அதிகரித்துள்ளது.
- 2025 முதல் 2027 வரை ஆண்டுக்கு சராசரியாக 6.3% வளர்ச்சி காணும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் அணு மின் உற்பத்தி 2024 ஆம் ஆண்டில் 13% அதிகரித்துள்ளது.
- இந்தியா தனது நிலக்கரி மின் உற்பத்தி திறனை அதிகரித்து, 2032 ஆம் ஆண்டுக்குள் 283 ஜிகாவாட் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்தியாவின் எரிசக்தி கலவை**

- இந்தியாவின் எரிசக்தி உற்பத்தியில் நிலக்கரி 2024 ஆம் ஆண்டில் 74% ஆக உள்ளது.
- இந்தியா தனது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை விரிவுபடுத்தி, 2024 ஆம் ஆண்டில் 21% ஆக இருந்த எரிசக்தி கலவையை 2027 ஆம் ஆண்டுக்குள் 27% ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளது.
- இந்த அறிக்கை, உலகளாவிய மின்சார தேவை மற்றும் உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களை விளக்குகிறது. மேலும், குறிப்பாக இந்தியாவின் மின்சார துறை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை சுட்டிக்காட்டுகிறது.


CHINMAYA ACADEMY CIVIL SERVICES (Coaching for Civil Services - IAS, IFS, IPS, IRS etc.)

## ஸ்கில் இன்டெக்ஸ் ( Skill Index )2025 - மெசர்-மேட்டில் அறிக்கை

- மெசர்-மேட்டில் நிறுவனம் "இந்தியாவின் பட்டதாரி திறன் குறியீடு 2025" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.

**இந்திய பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு**

- இந்த அறிக்கையின்படி, இந்திய பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு திறன் குறைந்துள்ளது.
- 2025-ஆம் ஆண்டில், 42.6% பட்டதாரிகள் மட்டுமே வேலைக்குத் தகுதியானவர்களாகக் கருதப்படுகின்றனர்.
- இது 2023-இல் 44.3%-ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.
- இதற்கான முக்கிய காரணம், வேலை வழங்குபவர்கள் எதிர்பார்க்கும் திறன்களுக்கும், பட்டதாரிகளிடம் உள்ள திறன்களுக்கும் இடையே உள்ள இடைவெளி அதிகரிப்பதே ஆகும்.



**வேலைவாய்ப்பு வேறுபாடுகள்**

- உயர்ந்த தரக் கல்லூரிகளில் (டயர்-I) பட்டம் பெற்றவர்கள் அதிக வேலைவாய்ப்பு விகிதத்தை (48.4%) கொண்டுள்ளனர்.
- அடுத்து டயர்-II (46.1%) மற்றும் டயர்-III (43.4%) கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்கள் உள்ளனர்.
- இந்திய மாநிலங்களில், டெல்லி, ஹிமாச்சல பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகியவை அதிக வேலைவாய்ப்புத் தகுதியுள்ள பட்டதாரிகளை கொண்டுள்ளன.

## அறிவியல்

### சாகர் கவச்




இந்திய கடலோர காவல் படையினர் 158 கிமீ நீளமான மேற்கு வங்காளத்தின்ன் கடற்கரையில் 'சாகர் கவச்' பயிற்சியை நடத்தினர். இந்த பயிற்சி கடலோர பாதுகாப்பை வலுப்படுத்தும் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் நோக்கத்தை கொண்டுள்ளது. இது பறிமுதல், கடத்தல், மற்றும் ( Improvised Explosive Device IED) தாக்குதல்கள் போன்ற அபாயங்களை எதிர்கொள்கின்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை பரிசோதித்தனர் .

## முக்கிய தினங்கள்




### தேசிய அறிவியல் நாள்

- ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28 ஆம் தேதி தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்படுகிறது.
- 1928 ஆம் ஆண்டு சர். சி.வி. ராமன் அவர்கள் "ராமன் விளைவு" கண்டுபிடிப்பை வெளியிட்டார்.
- ராமன் விளைவின் கண்டுபிடிப்பை சிறப்பிக்கும் வகையில் இந்த நாள் தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது.
- இந்த கண்டுபிடிப்பின் மூலம் 1930 ஆம் ஆண்டு இந்திய ஆராய்ச்சியாளர் சி.வி. ராமனுக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்தது.
- இந்தக் கண்டுபிடிப்பை ராமன் சிதறல் அல்லது ராமன் விளைவு என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



## TNPSC துளிகள்

- இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் ( Securities and Exchange Board of India SEBI ) 11 வது தலைவராக துஹின் காந்தா பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார்.



Contact : 93634 65657/93636 01008
Telegram Link https://t.me/ChinmayaTnpsc